SACRED HEART COLLEGE
(AUTONOMOUS)
TIRUPATTUR, TIRUPATTUR (DT)-635 601
TAMIL NADU, INDIA

DON BOSCO VAZHIKAATTI





# Professional Development Workshop for Physics Teachers

Organised by the Department of Physics, Sacred Heart College, in collaboration with Don Bosco Vazhikaatti, under NS-NOP

முதன்மைக்கல்வி அலுவலகம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
அலுவலக குறிப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கு.கோ.எண். 22/NS-NOP/ஒபக/2026

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம்- நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) - பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகள்/ கல்வி இணைச் செயல்பாடுகள்- திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி- அரசு மேல்நிலைப்பள்ளி இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்குதல்- மாவட்ட ஆட்சியர் அனுமதி வேண்டி- கோப்பு பணிந்து சமர்ப்பித்தல்- சார்பு.

பார்வை : திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரியின் இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவர் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) இணையதளத்தில் விண்ணப்பித்த கடித நகல் நாள்: 27.07.2026.

-----------------------

மேற்காணும் பொருள் மற்றும் பார்வையில் காணும் கடிதத்தின்படி, திருப்பத்தூர் மாவட்டம், ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மூலம் **"நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி"** (NS-NOP) திட்டத்தின் கீழ், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் /தனிநபர் பள்ளிகளில் கல்விசார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகளில் பங்கேற்க விரும்பின், தங்களது கருத்துருவை இணைய வழியே சமர்ப்பிக்கவும், அவற்றினை பரிசீலித்து அனுமதி வழங்குதல் உள்ளிட்டவற்றை விரைவுபடுத்த ஏதுவாக, இணையவழி அமைப்பு உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் தங்களது கருத்துருவை https://nammaschool.tnschools.gov.in/#/register/ npo=signup என்ற இணையதளம் மூலம் சமர்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இணையவழியே பெறப்படும் கருத்துருவானது, கீழ்கண்ட அரசு சாரா தொண்டு நிறுவனம்/ தனிநபரின் பங்களிப்பை செயல்படுத்தும் விதமாக அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வக கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள, ஒரு நாள் பயிற்சி வழங்குதல் குறித்து உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வழங்கும் பொருட்டு, தங்களின் மேலான அனுமதி வேண்டி, இக்கோப்பு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பதிவு செய்துள்ள தனிநபரின் பெயர் மற்றும் பதவி | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **Dr. M.JOSE**, Associate Professor, Sacred Heart College (Autonomous), Tirupattur. | 51 அரசு மேல்நிலைப்பள்ளிகள், திருப்பத்தூர் மாவட்டம் |

அ/13

மாவட்ட ஆட்சியர்
திருப்பத்தூர் மாவட்டம்.

1/1

COLLECTOR'S CAMP OFFICE
வரப்பெற்ற நாள்...28.07.2026
திருப்பப்பட்ட நாள்...28.07.2026

# திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 22/NS-NOP/ஒபக/2026 நாள்: 30.07.2026

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி- திருப்பத்தூர் மாவட்டம்- நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) - பள்ளிகளில் கல்விசார் செயல்பாடுகள்/ கல்வி இணைச் செயல்பாடுகள்- அனைத்து அரசு/அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளி இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்குதல்- பயிற்சியில் கலந்துகொள்ளுதல் -சார்பு.

பார்வை : 1. திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி, இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவர் நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி (NS-NOP) இணையதளத்தில் விண்ணப்பித்த கடித நகல் நாள்: 27.07.2026.

2. திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறிப்பு கோப்பு அனுமதி நாள்: 28.07.2026

---------------------

மேற்காணும் பொருள் மற்றும் பார்வையில் காணும் கடிதத்தின்படி, திருப்பத்தூர் மாவட்டம், ஒருங்கிணைந்தப் பள்ளிக்கல்வி மூலம் **"நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி"** (NS-NOP) திட்டத்தின் கீழ், பள்ளிகளில் கல்விசார்/கல்வி இணை செயல்பாடுகள் நிகழ்வுகளின்படி, தூயநெஞ்சக் கல்லூரியின் இணை பேராசிரியர் திரு.M.ஜோஸ் என்பவரின் பங்களிப்பை செயல்படுத்தும் விதமாக, **அனைத்து அரசு/ அரசு நிதியுதவிப் பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்களுக்கு வகுப்பறை மற்றும் ஆய்வக கற்பித்தலை திறம்பட மேற்கொள்ள** ஒரு நாள் பயிற்சி **19.08.2026** அன்று காலை 9.00 மணியளவில் **திருப்பத்தூர் தூயநெஞ்ச கல்லூரி (DMT Hall) வளாகத்தில்** வழங்கப்படவுள்ளது.

ஆகவே, அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள இயற்பியல் முதுகலை ஆசிரியர்கள் பயிற்சியில் கலந்துகொள்ள ஏதுவாக உரிய நாளில் பணிவிடுப்பு செய்து அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : இயற்பியல் முதுகலை ஆசிரியர்கள் பெயர்பட்டியல்.

F/C

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர் :

அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல் :

1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருப்பத்தூர் மாவட்டம்.
2. முதல்வர், தூயநெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி), திருப்பத்தூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ), திருப்பத்தூர் மாவட்டம்.

# About the Programme

The Department of Physics, Sacred Heart College (Autonomous), Tirupattur, coordinated a one-day training programme for Physics headmasters and senior teachers of Government and Government-aided Higher Secondary Schools in Tirupattur District, under the ***"Namma School Namma Ooru Palli" (NS-NOP) scheme of Integrated School Education.***

நம்ம School நம்ம ஊரு பள்ளி
PARTNERING FOR CHANGE

The proposal was submitted by Dr. M. Jose, Associate Professor, Department of Physics, through the NS-NOP portal (nammaschool.tnschools.gov.in) on 27.07.2026, seeking permission to conduct a one-day training on classroom teaching and investigatory/practical activities prescribed in the Physics syllabus for Classes 10 and 12. The District Collector, Tirupattur District, accorded approval vide the Chief Educational Office proceedings Ku.Ko.En. 22/NS-NOP/Opuga/2026 dated 30.07.2026, covering 51 Government Higher Secondary Schools in the district, and the workshop was scheduled for 19.08.2026 at DMT Hall, Sacred Heart College.






# Programme Objectives

- To enhance the pedagogical and experimental teaching skills of Physics teachers handling Classes X and XII.
- To familiarise teachers with the practical and investigatory project components of the Physics syllabus, including their assessment and evaluation.
- To create awareness among teachers about higher education pathways, career opportunities, and industry exposure available to Physics students.
- To provide hands-on laboratory demonstration experience that teachers can replicate in their respective schools.

# Organising Team

**Rector:** Rev. Fr. Stanley Lawrence Ignatius SDB
**Principal:** Rev. Dr. Praveen Peter SDB
**Additional Principal:** Rev. Dr. G. Theophil Anand SDB
**Programme Organiser:** Dr. M. Jose, Associate Professor & Head (PG), Department of Physics
**Heads of the Department:** Mr. D. Daniel Lawrence (UG Shift I), Mr. C. Thirupathy (UG Shift II), Dr. A. Dhayal Raj (Research)

# Resource Persons

| Resource Person | Topic(s) |
|---|---|
| Mr. M. Sanjeevkumar<br>Senior Manager, Deloitte, Australia | Worldwide opportunities for the students of Physics in the areas other than Physics |
| Rev. Fr. Joe Anand SDB<br>Director, Don Bosco Vazhikatti, Chennai | 1. Beyond B.Sc. Physics: Mapping Higher Education, Careers and Emerging Opportunities<br>2. From Classroom to Career: Preparing Physics Students for the Future of Work |

# Programme Schedule

| Time | Activity |
|---|---|
| 09.00 AM – 09.30 AM | Registration |
| 09.30 AM – 10.00 AM | Inaugural Function |
| 10.00 AM – 11.15 AM | Invited Talk 1 |
| 11.15 AM – 11.45 AM | Tea Break |
| 11.45 AM – 01.00 PM | Invited Talk 2 |
| 01.00 PM – 02.00 PM | Lunch |
| 02.00 PM – 03.10 PM | Lab Demonstration |
| 03.15 PM – 04.00 PM | Invited Talk 3 |
| 04.00 PM – 04.30 PM | Valedictory Function |
| 04.30 PM | Tea |





# Proceedings

The workshop began with registration of participating teachers, followed by the inaugural function. College Bursar Rev. Fr. Stanley Lawrence Ignatius SDB inaugurated the programme by lighting the traditional lamp. Additional Principal Rev. Dr. G. Theophil Anand SDB welcomed the gathering, and Principal Rev. Dr. Praveen Peter SDB along with the Chief Educational Officer, Tirupattur District, addressed and greeted the participants.

Invited Talk 1 and Invited Talk 2 were delivered by the resource persons on career pathways, higher-education opportunities beyond a B.Sc. in Physics, and preparation of students for the future world of work, followed by a session on worldwide opportunities available to Physics students in fields other than core Physics. After lunch, a hands-on Lab Demonstration session was conducted for the visiting teachers on the experimental/practical activities prescribed in the Class 10 and 12 Physics syllabus, followed by Invited Talk 3.

The programme concluded with a Valedictory Function, coordinated jointly by the Head of the Department (Research), Dr. A. Dhayal Raj, and faculty members of the Department of Physics. More than 100 Physics teachers from government and government-aided higher secondary schools across Tirupattur District participated in the one-day training.



# Programme Outcome

The training programme enabled participating teachers to gain greater clarity on the practical and investigatory project components of the Physics syllabus and their evaluation for Classes 10 and 12. It also provided exposure to emerging higher-education pathways and career opportunities in Physics, equipping teachers to guide and motivate their students. Through hands-on laboratory demonstrations, teachers acquired practical methods and techniques that can be replicated in their respective school laboratories. The programme further strengthened the collaboration between Sacred Heart College and the Office of the Chief Educational Officer, Tirupattur District, under the Namma School Namma Ooru Palli (NS-NOP) scheme.





இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
வேலூர் பதிப்பு (VELLORE) • வியாழன், ஆகஸ்ட் 20, 2026
Printed at: Chennai, Kovai, Madurai, Tiruchirapalli, Thiruvananthapuram, Bengaluru



பொது தகவல்: ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூயி டாகுரே என்பவர் உருவாக்கிய புகைப்படத் தொழில்நுட்பம், டாகுரோடைப் எனப்படுகிறது. இதுவே உலகின் முதல் வணிக ரீதியாக வெற்றி பெற்ற புகைப்பட தொழில்நுட்பமாகும்.



திருப்பத்தூர் தூய நெஞ்ச கல்லூரியில்

## முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கு பயிற்சி பட்டறை

திருப்பத்தூர்

திருப்பத்தூரில் முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நேற்று நடைபெற்றது.

திருப்பத்தூர் தூய நெஞ்ச கல்லூரியின் இயற்பியல் துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி பட்டறை கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தவும், 10 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு இயற்பியல் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறை சோதனைகள், ஆய்வக சோதனைகள் பற்றிய நிகழ்ச்சியில் கல்லூரியின் தாளாளர் ஸ்டான்லி லாரன்ஸ் இக்னாசியஸ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.



திருப்பத்தூர் தூய நெஞ்ச கல்லூரியில் முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

கல்லூரியின் கூடுதல் முதல்வர் தியோபில் ஆனந்த் வரவேற்றார். கல்லாரியின் முதல்வர் பிரவீன் பீட்டர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில், "இயற்பியல் படிப்பின் முக்கியத்துவம், அதன் எதிர்காலம், பல்வேறு துறைகளில் இயற்பியலின் தாக்கம், வேலைவாய்ப்பு, தொழிற்சார்ந்த துறைகளில் இயல்பியலின் பங்கு, மாணவர்களுக்கு இயற்பியல் பற்றிய ஒரு தெளிவான அறிவியல் சிந்தனையை எவ்வாறு ஊக்குவிப்பது போன்ற கருத்துக்களை சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட ஆஸ்திரேலிய 'டியோலைட்' சஞ்சீவ்குமார் மற்றும் சென்னை தொன்போஸ்கோ வழிகாட்டி ஜோ ஆனந்த் ஆகியோர் எடுத்துரைத்தனர்.

இதில், பள்ளி ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் இயற்பியல் துறையில் உள்ள ஆய்வகங்களில், முப்பதுக்கும் மேற்பட்ட செய்முறை சோதனைகள் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. முதுகலை இயற்பியல் பிரிவு இரண்டின் துறைத்தலைவர் முனைவர் ஜோஸ் மற்றும் இயற்பியல் துறையின் பேராசிரியர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர்.



திருப்பத்தூரில்

## முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறை

### மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பங்கேற்பு

திருப்பத்தூர், ஆக.20-

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் இயற்பியல் துறை சார்பில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கு, 10, 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு இயற்பியல் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறை சோதனைகள், ஆய்வக சோதனைகள் பற்றிய ஒருநாள் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. கல்லூரி தாளாளர் ஸ்டான்லி லாரன்ஸ் இக்னாசியஸ் தொடங்கி வைத்து பேசினார். கூடுதல் முதல்வர் தியோபில் ஆனந்த் வரவேற்று பேசினார். முதல்வர் பிரவீன் பீட்டர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஆஸ்திரேலியா டியோலைட் சஞ்சீவ்குமார், சென்னை தொன் போஸ்கோ வழிகாட்டி ஜோ ஆனந்த் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். முதுகலை இயற்பியல், பிரிவு இரண்டின் துறைத் தலைவர் ஜோஸ் மற்றும் இயற்பியல் துறை பேராசிரியர்கள் ஒருங்கிணைந்து நடத்தினர்.

ஜோலார்பேட்டை அருகே

## கோஷ்டி மோதலில் 2 பேர் கைது

ஜோலார்பேட்டை, ஆக.20-

ஜோலார்பேட்டையை அடுத்த சின்னகவுண்டப்பனூரை சேர்ந்தவர் தேவேந்திரன். இவரின் மனைவி பாத்திமா (வயது

உண்மைக்கு உயிர்! மக்களுக்காக எழும் நாளிதழ்!
தின ராஜ்ஜியம்
தினசரி காலை நாளிதழ்
DINA RAJIYAM DAILY MORNING NEWSPAPER
20.08.2026 வியாழக்கிழமை ₹ 6.00
PRGI-NO TNTAM/25/A0009

## முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை



திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் இயற்பியல் துறை ,அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் முதுநிலை இயற்பியல் ஆசிரியர்களுக்கு , அவர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தவும் , 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு இயற்பியல் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறை சோதனைகள் , ஆய்வக சோதனைகள் பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியை கல்லூரியின் தாளாளர் அருட்திரு ஸ்டான்லி லாரன்ஸ் இக்னாசியஸ் தொடங்கிவைத்து சிறப்புரை ஆற்றினார்.

கல்லூரியின் கூடுதல் முதல்வர் அருட்திரு தியோபில் ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார்.

கல்லூரியின் முதல்வர் அருட்திரு பிரவீன் பீட்டர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு புண்ணியகோட்டி அவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

இயற்பியல் படிப்பின் முக்கியத்துவம் , அதன் எதிர்காலம் , பல்வேறு துறைகளில் இயற்பியலின் தாக்கம் , வேலை வாய்ப்பு , தொழிற்சார்ந்த துறைகளில் இயற்பியலின் பங்கு , மாணவர்களுக்கு இயற்பியல் பற்றிய ஒரு தெளிவான அறிவியல் சிந்தனையை எவ்வாறு ஊக்குவிப்பது போன்ற கருத்துக்களை சிறப்பு அழைப்பாளர்கள் திரு சஞ்சீவ்குமார் - Deoline (ஆஸ்திரேலியா), மற்றும் அருட்திரு ஜோ ஆனந்த் -டொன்போஸ்கோ ஆகியோர் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் இயற்பியல் துறையில் உள்ள ஆய்வகங்களில், முப்பதுக்கும் மேற்பட்ட செய்முறை சோதனைகள் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. முதுகலை இயற்பியல், பிரிவு இரண்டின் துறைத்தலைவர் முனைவர் ஜோஸ் , மற்றும் இயற்பியல் துறையின் பேராசிரியர்கள் ஒருங்கிணைத்து நடத்தினர்.

திருப்பத்தூர் மாவட்ட செய்தியாளர் ரகுநாதன்.

# Don Bosco Vazhikaatti

#46, Siruvallur Road, Perambur, Chennai - 600 011.
www.donboscovazhikaatti.com
89258 39478, 93852 01459, 044 - 2670 4491

Follow us: